# மேல்நிலை இரண்டாமாண்டு - பொதுத்தமிழ்

நேரம் : 40 நிமிடங்கள் **இயல் - 5** மதிப்பெண் : 25

**I .பலவுள் தெரிக.** 8 x 1 = 8

1. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல; அது நம்பிக்கை மையம். – காரணம்
   அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம் ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
   இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ – அனைத்தும்
2. பொருத்துக.
   அ) திருவல்லிக்கேணி ஆறு – 1) மாவலிபுரச் செலவு
   ஆ) பக்கிங்காம் கால்வாய் – 2) கல் கோடரி
   இ) பல்லாவரம் – 3) அருங்காட்சியகம்
   ஈ) எழும்பூர் – 4) கூவம்
   அ) 1 2 4 3 ஆ) 4 2 1 3 இ) 4 1 2 3 ஈ) 2 4 3 1
3. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு
   அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்
4. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது ?
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
5. படிமம் என்பதன் பொருள் அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
6. மெய்ப் படிமத்துக்கு உரிய பாடலைத் தேர்வு செய்க.
   அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந்தாங்கு..... ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது.....
   இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்...... ஈ) வெந்தாறு பொன்னின் அந்திப் பூப்ப......
7. 'பூம்பாவாய்' என்பதன் இலக்கணக் குறிப்பு
   அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத்தொகை இ) அண்மை விளி ஈ) சேய்மை விளி
8. 'தலைக்குளம்' சிறுகதையின் ஆசிரியர்
   அ) பிரபஞ்சன் ஆ) தோப்பில் முகமது மீரான் இ) அம்மூவனார் ஈ) பூமணி

**II குறுவினா – ஏதேனும் ஆறனுக்கு மட்டும் விடையளி** **6 x 2 = 12**

9. கலிவிழா, ஒலிவிழா – விளக்கம் தருக.
10. சென்னையில் கிடைத்த பழமையான கல்வெட்டுகள் பற்றிக் கூறுக.
11. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
12. இராமலிங்கர் எத்தகையோர் உறவு வேண்டும் என்கிறார் ?
13. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தி இருக்கிறது" – இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது ?
14. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சுக்கோ.
    ஆ) நிலத்தக் கெளறணும்டா அப்பதான் வகுறு நெறையும்.
15. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.
    அ) பூட்டிய வீட்டிலும் பூத்துச் சிரிக்கிறது................................
    ஆ) வானம் அழுகிறது; பூமி சிரிக்கிறது.................................

**III.இலக்கிய நயம் பாராட்டல் /மனப்பாடப்பகுதி – ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி** **1 x 5 = 5**

16.

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெ னில் – நல்ல
செய்கை வேண் டுமப்பா !

நன்மை செய்பவரே – உலக ம்
நாடும் மேற்குலத்தா ர் !
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார் !

–கவிமணி தேசிக விநாயகம்

**(அல்லது)**

**'ஒருமையுடன் நினது'** எனத் தொடங்கும் இராமலிங்க அடிகளின் தெய்வமணிமாலை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ப.க.சுரேசு, முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, நெரூர், கரூர். 9942141963.

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

# மேல்நிலை இரண்டாமாண்டு - பொதுத்தமிழ்

நேரம் : 40 நிமிடங்கள் **இயல் - 6** மதிப்பெண் : 25

**I .பலவுள் தெரிக.** 8 x 1 = 8

1. ஏழாண்டு இயற்றிஓர் ஈராறு ஆண்டில் சூழ்கடல் மன்னற்குக் காட்டல்.... – தொடர்களில் வெளிப்படும் செய்திகள்
   1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
   2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

   அ) 1 சரி, 2 தவறு ஆ) 1 தவறு, 2 சரி இ) 1 தவறு, 2 தவறு ஈ) 1 சரி, 2 சரி
2. பொருத்துக.

   அ) ஆமந்திரிகை –1) பட்டத்து யானை
   ஆ) அரசு உவா – 2) மூங்கில்
   இ) கழஞ்சு – 3) இடக்கை வாத்தியம்
   ஈ) கழை – 4) எடை அளவு

   அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1
3. வேறுபட்டதைக் குறிப்பிடுக.

   அ) அண்மைக் காட்சி துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
4. 1940 – ல் சார்லி சாப்ளின் எடுத்த முதல் திரைப்படம்......

   அ) தி கிரேட் பிக்டேட்டர் ஆ) மாடர்ன் டைம்ஸ் இ) சிட்டி லைப்ஸ் ஈ) லிட்டில் டிராம்ப்
5. 'திண்ணியர்' என்பதன் பொருள்

   அ) அறிவுடையவர் ஆ) மன உறுதி உடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்
6. 'ஐம்பெரும் காப்பியம்' என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

   அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்
7. சொல்லுதல் – இலக்கணக்குறிப்பு தருக

   அ) பண்புத்தொகை ஆ) பண்புப்பெயர் இ) தொழிற்பெயர் ஈ) உருவகம்
8. **Artist** – என்பதன் தமிழ்க் கலைச்சொல்

   அ) கவின்கலைஞர் ஆ) இயக்குநர் இ) ஒளிப்பதிவாளர் ஈ) பாடகர்

**II குறுவினா – ஏதேனும் ஆறனுக்கு மட்டும் விடையளி** **6 x 2 = 12**

9. நகை உருவாகும் சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.
10. பின்னணி இசை படத்தின் காட்சி அமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும் ? சான்று தருக.
11. **தலைக்கோல்** – புணர்ச்சி விதி கூறுக.
12. காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை ?
13. பாவிகம் – விளக்குக.
14. பொருள் வேறுபாடு அறிந்து ஒரே தொடரில் அமைக்க. அ) களம், கலம் ஆ) ஊண், ஊன்
15. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

    குதிரை, வேகம், ஓடு, தாவு

**III. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி** **1 x 5 = 5**

16. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

**(அல்லது)**

**கதையைத் தொடர்ந்து நிறைவு செய்க.**

வேப்ப மரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன்மீது பூசினேன். ஆனாலும் அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்கும்......

பு.க.சுரேசு, முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, நெரூர், கரூர். 9942141963.

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

# மேல்நிலை இரண்டாமாண்டு - பொதுத்தமிழ்

நேரம் : 40 நிமிடங்கள் **இயல் - 7** மதிப்பெண் : 25

**I .பலவுள் தெரிக.** 8 x 1 = 8

1. ‘பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்’ – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
   அ) சோழன் நெடுங்கிள்ளி, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளி, கோவூர் கிழார்
   இ) கணைக்கால் இரும்பொறை, கபிலர் ஈ) கரிகாலன், உருத்திரங்கண்ணனார்
2. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
   அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
   இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்
3. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் – இத்தொடரில் பெயரெச்சம்
   அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்
4. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.
   அ) கர்ணன் தோற்றான் போ. ஆ) வயதில் சிறியவள்; ஆனாலும் தலைவி!
   இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு. ஈ) இந்தா போறான் தருமன்.
5. ‘சாப விமோசனம்’, ‘அகலிகை’ கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
   அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ். ராமகிருஷ்ணன்
6. பண்புக் குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.
   அ) அறம் – 1) கர்ணன்
   ஆ) வலிமை – 2) மனுநீதிச் சோழன்
   இ) நீதி – 3) பீமன்
   ஈ) வள்ளல் – 4) தருமன்
   அ) 3 2 1 4 ஆ) 4 3 2 1 இ) 2 4 3 1 ஈ) 4 3 1 2
7. காய்நெல்– இலக்கணக்குறிப்பு தருக
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) உருவகம்
8. **Debit Card** – என்பதன் தமிழ்க் கலைச்சொல்
   அ) பற்றுஅட்டை ஆ) பற்றுச்சீட்டு இ) கடவுச்சீட்டு ஈ) கடன் அட்டை

**II குறுவினா – ஏதேனும் ஆறனுக்கு மட்டும் விடையளி** **6 x 2 = 12**

9. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை ?
10. செவியறிவுறூஉ துறையை விளக்குக.
11. பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
12. தொன்மம் – விளக்கம் தருக.
13. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.
14. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
    அ) வழிவழியாக ஆ) அகலக்கால்
15. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
    அ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டிக் கூரை அமைத்தார்.
    ஆ) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகளின் பொந்துகள் அமைந்திருந்தன.

**III. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி** **1 x 5 = 5**

16. சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர் கல்வெட்டு எங்ஙனம் துணைபுரிகிறது– விளக்குக.

**(அல்லது)**

நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

ப.க.சுரேசு, முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, நெரூர், கரூர். 9942141963.

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

# மேல்நிலை இரண்டாமாண்டு - பொதுத்தமிழ்

நேரம் : 40 நிமிடங்கள் **இயல் - 8** மதிப்பெண் : 25

**I .பலவுள் தெரிக.** 9 x 1 = 9

1. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
   அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி
2. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் கொண்டிருந்த சின்னம்
   அ) புலி ஆ) வில் இ) மீன் ஈ)யானை
3. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்
   அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும் இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்
4. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
   அ) ஆய் ஆண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
   இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்
5. இரட்சணிய யாத்ரிகம் எத்தனைப் பருவங்களைக் கொண்டது
   அ) 4 ஆ) 6 இ) 5 ஈ) 2
6. கூற்று : 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.
   காரணம் : பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.
   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்றும் சரி, காரணமும் சரி
   இ) கூற்றும் தவறு, காரணமும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி
7. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களில் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்
   அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமம்
8. மறைத்துச் சொல்லவும் மிகுத்துத் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது ?
   அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்
9. **புதையுண்ட வாழ்க்கை, மீண்டெழுதலின் ரகசியம்** ஆகிய இரு கவிதைத் தொகுப்புகளைப் படைத்தவர்
   அ) பூமணி ஆ) கோதைநாயகி இ) சுகந்தி சுப்பிரமணியன் ஈ) தமிழ் நதி

**II குறுவினா – ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி** **5 x 2 = 10**

10. முகம் முகவரியற்றுப் போனதற்கு, சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.
11. இறை மகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர் ?
12. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.
13. "விரிபெரு தமிழர் மேன்மை ஓங்கிடச் செய்வ தொன்றே உயிர்ப்பணி யாகக் கொண்டோன்" – யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார் ?
14. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.
15. விடைக்கேற்ற வினா அமைக்க.
    அ) 1856–இல் தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
    ஆ) "எதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்.

**III. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி** **1 x 6 = 6**

16. 'கோடைமழை' என்னும் கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.
17. எச். ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.
18. "மயிலையார் ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

ப.க.சுரேசு, முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, நெரூர், கரூர். 9942141963.

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com